# குபேரசாமி

## 1

"ஓர் ரூபா... ஒரே ரூபா... ஒரு லட்சம் ரூபா! போ வராது. ஒரே ரூபாண்ணே. அப்பால பங்களா கட்ட கார்ல போவலாம். கால் மேல கால் போட்டு உக்கா கோழிக்கால் சூப்பா குடிக்கலாம். ஓர் ரூபா... ஒரே ரூ ஒரு லட்சம் ரூபா..."

சீட்டு விரித்த மாதிரி லாட்டரிச் சீட்டை விரித் பிடித்துக் கொண்டு அந்தச் சிறுவன் ஒரு லட்சத்தை ரூபாய்க்குத் தந்தே தீரும் துடிப்புடன் சுற்றிச் சுற்றி வ கொண்டிருந்தான்.

சரியான வியாபாரக் குரல். படிய வாரிய தல பட்டைக் குங்குமம். ஆனால் அழுக்குச் சட்டை, முட்டிய கிழிந்து தைக்கப்பட்ட கறுப்புப் பேண்ட்.

காலில் செருப்பில்லை. பதிலுக்கு கண்ணி நெருப்பிருந்தது. வாங்காமல் விட மாட்டேன் என்ப போல அவன் வசனம் பேசி ஆசை மூட்டி அலைந் திரிவதில் ஒருவகை ரசமும் எனக்கு இருக்கத்தான் செய்த

இன்று நேற்றா பார்க்கிறேன்? ஏழெட்டு மாதக் காட்சி



மதுரை பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காக நானும் என்னைப் போல பல சகாக்களும் காத்திருக்க வேண்டும் என்பது எந்த ஜென்மத்து சாபமோ தெரியாது.

மதுரைக்கு வெளியில் புல்கூட முளைக்க மறுக்கும் ஒரு வறண்ட நிலப்பகுதியில் இருக்கிறது எங்கள் தொழிற்சாலை.

மூன்று ஷிப்ட் கொண்ட ஒரு யந்திரச் சுழற்சியில் பஸ் ஸ்டாண்டில் காலை மாலை இரவு என்று எல்லா கால நிலையிலும் நாங்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்தாக வேண்டும்.

அப்படிக் காத்திருக்கும் சமயத்தில் ஏகக்கூத்துகளைப் பார்க்கலாம். அதில் இந்த லாட்டரிச் சிறுவனின் ஆசை வசனம் ஒரு சுண்டைக்காய்தான்.

அழுகல் பேரீச்சம்பழத்தை அம்பாரமாக குவித்து வைத்துக் கொண்டு திருட்டுத் தராசோடு நடக்கும் வியாபாரத்தில் இருந்து, அடுத்த நாளே கருகப் போகும் செப்புச் சங்கிலியைப் பதினெட்டு காரட் தங்கம் என்று சொல்லி விற்கப் பார்க்கும் இந்திர ஜாலம் வரை ஏகக் காட்சிகள்.

இதில் ஒருவன் பேனா விற்பான் பாருங்கள் படு போஷாக்கான காட்சி அது. பருத்த அட்டை மேல் கிறுகிறுவென எழுதிக் காட்டி விட்டு அப்படியே பேனா முனையால் அந்த அட்டையை சதக் சதக் எனக் குத்தி 'குத்தலாம் குடையலாம் கும்முன்னு எழுதிக் கலக்கலாம். காதல் மோதல் காரசாரமான கதை குறிப்பா மர்மக் கதையை மணக்க மணக்க எழுதலாம். கடைக்குப் போனா கண்ணாடி ஷோ கேஸ்ல வெச்சு அம்பது ரூபாம்பாங்க. இங்கே விளம்பரத்துக்காகத் தாரேன் அஞ்சே ரூவா! கூடவே மூணு பொருள். கண்ணாடி, ரப்பர், கண் மைன்னு மூணு

பொருள். வாங்க சார், வாங்கம்மா, வாங்க... வாங்கண்ணே, வாங்க பெரிசு, அஞ்சே ரூவா... அஞ் ரூவா...'

நான் பார்த்துக் கொண்டே நிற்பேன். வயிற் பாட்டுக்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ந பர்ஸை குறிவைத்துச் செய்யும் சப்தமல்லவா அ மதுரைக்காரர்களுக்கு நெற்றியை நன்றாகப் படிக் தெரியும்.

நாகர்கோயில்காரர்கள் நெற்றி என்றால் அ ஏமாளிகள் என்று பெரிய எழுத்தில் எழு ஒட்டியிருக்குமோ என்னமோ?

'வாங்க அண்ணாச்சி' என்று வரவேற்று ஊளை ஆ புளித்த திராட்சை, அழுகல் பேரீச்சை என்று சகலத்தை தலையில் கட்டுவதில் ஒரு சாதனையே நடத் காட்டுவார்கள்.

நடுவில் ஒருவன் அழதபடி வந்து துணி விற்பனை சொல்லியே தீரவேண்டும்.

"சார், சார்! அருமையான பாலியெஸ்டர் சட்டைத் து சார்! நூறு ரூவா துணி சார்! எழுபத்தஞ்சு ரூவா. பில் கூடக்காட்றேன் சார்!"

"எனக்கு விருதுநகர். ஒரு வேலையா மதுரை வந்தே வந்த இடத்துல சட்டைத் துணி வாங்குனேன். வழியி பர்ஸ் தொலைஞ்சு போச்சு. ஊருக்குப் போயாகணும் என்ன சார் பண்ண... பாத்து போட்டுக்கொடுங்க சார்..." என்று ஆஸ்கர் விருதுக்குத் தகுதி பெறும் தினுசில் ஏற் இரக்கம் மிகுந்த பேச்சோடும் வருத்தத்தோடும் ஒருவ ஒவ்வொரு பஸ்ஸிலும் ஏறி இறங்கிக் கத்தாழை நாரில் ஆ



கால் காசு பெறாத சட்டைத் துணியைத் தலையில் கட்டப் பார்ப்பான்.

ஒருமுறை வாங்கி உதைபட்ட பிறகுதான் நமக்கும் ஞானம் வரும். கண்டக்டர் மட்டும் நமுட்டுச் சிரிப்புடன் கண்டு கொள்ளாமல் போய் வந்து கொண்டிருப்பார்.

ஒருமுறை நான் ஏமாறப் பார்த்து விளிம்பில் தப்பித்தேன் கண்டக்டரை கூப்பிட்டு, "இப்படி டுபாக்கூர் பார்ட்டியை எல்லாம் பஸ்ல ஏத்தறியே தலைவா நியாயமா?" என்று கேட்டும் விட்டேன்.

நக்கீரனைப் பொசுக்கும் முன் சொக்கநாதன் பார்த்தானே ஒரு பார்வை!

"அவனை நான் பஸ்ல ஏத்தாட்டி, அவன் கத்தி என் வவுத்துல ஏறும். தேவையா எனக்கு? நீங்கதான் சார் ஷுரா இருக்கணும். உங்களுக்கென்ன பி.எஃப்., கிராஜுட்டி, அந்த லோனு, இந்த லோனு மெடிக்கலுன்னு ஆயிரம் வசதிங்க. எங்களுக்கு என்னா இருக்குது? அவன் ஒரு சட்டை பிட்டு வித்தா ஒரு பத்து ரூவா வெட்டுவான். தீபாவளிக்கு தீபாவளி கூட நீங்க தர மாட்டீங்களே..."

கண்டக்டரின் விளக்கத்தில்தான் எத்தனை பொருளா தாரச் சிந்தனை!

நான் சிந்தித்தவண்ணம் நின்று கொண்டிருந்து விட்டு, எனக்கான பஸ் வரவும் பின்சீட்டாகப் பார்த்து ஏறி அமர்ந்தும் கொள்வேன்.

நான் ஒரு சொற்ப தூரப் பயணி அதனாலே சீட்டில் உட்கார்ந்திருந்தாலும் கண்டக்டர் கடுப்பில் இருந்தால் எழுப்பி விடுவார். சமயங்களில் பஸ் கிளம்பி பஸ் ஸ்டாண்ட் வளைவில் போகும் போது அரைமனதாக என்னைப் பார்க்க ஓடிப்போய் ஏறிக் கொண்டு

வியர்வையை வழிப்பேன் நான் மட்டுமில்லை எ
கூட்டத்துக்கே இப்படி அனுதினமும் ஓடுவதுதான் வே

என்னைப் போலத்தான் டாவ் தமிழ்மணியும்.

'டாவ்' அவன் கேரக்டர் நிமித்தம் எங்கள் தொ
அன்பர்கள் மனமுவந்து அளித்த பத்மஸ்ரீ போ
விருதாகும்.

பில்கிளின்டன் மோனிகா லெவன்ஸ்கி விவகார
தான் ஆரம்பத்திலேயே எச்சரித்ததைக் கேட்கவில்
அதனால்தான் அவர் அவஸ்தைப்படுகிறார் என்று
தமிழ்மணி பேசும் போது கேட்க வேண்டும். பி
வாயை மூடத் தோன்றாது. நாம் நம்புகிறோம். நம்பவில்
என்பதைப் பற்றி கவலையோ பிரக்ஞையோ இ
எப்படித்தான் இப்படி அடித்து விடுகிறானோ?

'நாலு பேர் தன்னைப் பார்க்க வேண்டும். தன் பேச்
கேட்க வேண்டும் வியந்து கொண்டே இருக்க வேண்
இது மட்டும்தான் அவன் எதிர்பார்ப்பு என்பது கூ
பதினைந்து வருடங்களாக மாத்ருபூதம் போ
மனக்கூறுகளை அளந்து நான் கணித்து வைத்திருக்கிறே

பஸ் ஸ்டாண்டில் கால் கடுக்க நின்று கொண்டிருக்
தருணங்களில் தமிழ்மணி இருந்தால் பொழுது போவ
தெரியாது. அன்றைய நாட்டு நடப்பை ஒட்
சமாசாரங்களாக எடுத்து கொத்திக் கிளறி குருமா சேர்த்
சுடச்சுட அவன் வழங்கும் போது சினிமா டிவி போ
பொழுது போக்குச் சமாசாரங்களே தேவையில்லை என்
தோன்றும்.

அதிலும் வாஜ்பாய், ஜெயலலிதா ஊடல் கூடல் பற்
அவன் பேசும் போது சிரித்து மாளாது.



இப்படிப்பட்ட டாவ் தமிழ்மணி கடந்த பத்து நாட்களாக வேலைக்கு வரவில்லை.

புருணே சுல்தானுக்கு ஏதோ பிரச்சினை தீர்த்து வைக்கப் போயிருப்பதாகச் சிலர் அவன் பாணியில் சொல்லிக் கொண்டிருக்க தமிழ்மணி ஒரு வாரத் தாடை முடியோடு பஸ் ஸ்டாண்டுக்குள் பிரசன்னமானபோது எனக்கு என்றில்லை எல்லாருக்குமே சந்தோஷ பரவசம் ஏற்படத்தான் செய்தது.

''என்னா தமிழ் ஆளைக் காணோம்... எங்க போயிட்டே....''

''ப்ச்ச்... ஒரு பாம்பே பார்ட்டிக்கு பிராப்ளம். அதான் வந்தாகணும்னான். போய்ட்டேன்.''

''என்னாச்சு... பிராப்ளம் சால்வ்டா?''

''தோடா... நான் போயிருக்கேன். சால்வாகாம இருக்குமா? என்னா கொமார் கேக்கறே நீ?''

''சரி போறது போறே, லீவ் லெட்டர் கொடுத்துட்டுப் போலாம்ல?''

''ஏன் டிபார்ட்மென்ட்ல ஒப்பாரி வெச்சானா சூப்பு...''

''பின்னே... இன்னிக்கு மட்டும் நீ வரலேன்னு வை. நோட்டீஸ் போர்ட்ல போட்டுருப்பாங்க.''

''கிழிச்சாங்க. அப்பால அவன் சமாசாரத்தைப் பூரா நான் நோட்டீஸ் போர்ட்ல போட்டா தாங்குவானா அவன்?''

''அது என்ன அவன் சமாசாரம்...?''

''அது இருக்குது ஒரு மூட்டை. சின்ன வீட்ல ஆரம்பிச்சு, கமிஷன் காண்ட்ராக்ட் ஊழல் வரைல ஒரு மூட்டைல்ல இருக்குது?''

தமிழ்மணி தான் தப்பிக்க பாதைபோட்டுப் பேசும் அ
தருணத்தில்தான் திரும்ப வந்தான் வழக்கமாக வரும் அ
லாட்டரிச் சீட்டு விற்கும் சிறுவன்.

“ஓர் ரூவாண்ணே. ஒரே ரூவாண்ணே! விழுந்
லட்சம்ணே. கார்ல போகலாம். கால் மேல கால் போ
பிரியாணியா சாப்பிட்லாம். ஒரு ரூவாண்ணே. ஒரு சீ
வாங்குங்கண்ணே...”

சுத்திச் சுத்தி வந்தான். சரியாக போணி ஆகவில்ல
போலும். கையில் சீட்டு அப்படியே இருந்தது. தமி
மணிக்கு சிவுசிவு என்று சீவிக் கொண்டு வந்தது கோப

“டேய் போங்கு போடா அப்பால. ஓர் ரூவாய்க்கு ஒ
லட்ச ரூபாய தள்ற மூஞ்சியப் பாரு. கார்ல போலாம
பிரியாணி சாப்பிடலாமாம்... சாப்ட்டு? திரும்ப இந்த ப
ஸ்டாண்டுல வந்து நின்னு சிங்கி அடிக்கவா? வெண்ண

“அப்படிச் சொல்லாதீங்கண்ணே. ஒரு சீட்
வாங்குங்கண்ணே லட்ச ரூவாண்ணே...”

“டேய் போங்கு... இப்பத்தானடா சொன்னே
போடா அப்பால. இத வாங்கறதுக்குத்தான் ஒரு கோஷ்
நாயா அலையுதுல்ல, அவங்ககிட்ட போடா.”

“இன்னிக்கு வியாபாரமே சரியில்லண்ணே, யாரு
வாங்க மாட்டேங்கறாங்க. என் கை ராசியான கை
அண்ணே. நீங்க மட்டும் நம்பி வாங்குங்க. விழுவாட்
கேளுங்கண்ணே.”

“ராசியான கைய்யா... கட்டாயம் உழுவுமாக்கும்
அடடா... பை கொண்டு வரலியே-எதுலடா ரூவான
போட்டு எடுத்துக்கிட்டுப் போக?”

“வாங்குங்கண்ணே... ஒரு சீட்டுண்ணே.”



“ஒன்னுல்ல... பத்து வாங்கறேன். உழுவாட்டி என்னா பண்றது?”

தமிழ்மணிக்கு இன்று ஆள் மாட்டியாயிற்று.

“உழுவும்ணே... கட்டாயம் உழுவும்ணே. நம்புங் கண்ணே.”

“சரி நம்பறேன். ஒருக்கால் உழுவாட்டி?”

தமிழ்மணி விடாமல் அவனைப் புரட்டி எடுக்க, அவனும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டிருந்தான்.

“உம், சொல்லுடா டவுசர், உழுவாட்டி என்னா பண்றதாம்?”

“உழுவும்ணே. நம்புண்ணே.”

“சரி ஒரு பந்தயம் வெக்கலாமா?”

“என்னண்ணே?”

“உழுவாட்டி டிக்கெட் காசை நீ தந்துடணும். உழுந்தா உழுவறதுல பாதிய நான் உனக்குத் தரேன். என்ன சொல்றே?”

“............”

“சொல்றா வெண்ணை. பஸ் வந்துருச்சி பார். பார். என்னா சொல்றே?”

“சரிண்ணே...”

அவன் பலவித நினைப்போடு தலையாட்ட, தமிழிடம் ஒரே ஆச்சர்யம். “தராட்டி கண்ணு முழிய நோண்டிப் பிடுவேன்” என்று பத்துசீட்டை வாங்கிக் கொண்டு ஒரு பத்து ரூபாயைத் தட்டிவிட்டான் தமிழ்மணி.

அந்தச் சிறுவனிடம் இமாலயம் ஏறி கொடி நட்ட திருப்தி.

டாவ் தமிழ்மணியும் என் பக்கம் திரும்பியபடியே டிக்கெட்டையும் கசக்கிப் பந்தாக்கி பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

"ஏய்... என்னப்பா காசைக் கொடுத்து வாங்கி கசக்கிப் போட்றே..."

"அட போ கொமாரு! லாட்ரி விழுந்துதான் வி போவுதாக்கும்? இதெல்லாம் சும்மா அப்படி விழுந்தாலும் ஏதாவது நல்ல காரியத்துக்குக் கொடு வேன். ஆனா அதெல்லாம் நடக்கப் போறதில்ல. நீ வே பார், இந்தப் பய இனி என்கிட்ட என்ன பாடு போறான்னு. என்னப் பார்த்தாலே ஓடப்போறான் பாரு சொன்னபடியே கிளம்பப் பார்த்த பஸ்ஸில் ஏறினா நானும்...

அன்று பஸ்ஸுக்குக் காத்திருக்கும்போது அந்த ரூவா சிறுவன் என்னை நோக்கி ஓடி வந்தான்.

"சார் சார், எங்க சார் நம்ம தமிழ் சார்?" என்றான்.

"என்னாடா... இன்னிக்கும் சீட்ட தலைல கட்ட பாக்கறியாக்கும்?"

"நான் கட்ட வேணாம் சார். என் ராசிதான் நிரூபண யிடிச்சுல்ல? அவர் வாங்குன ஒரு சீட்டுக்கு லட்ச ரூ விழுந்துடிச்சு சார்..." என்றான்.

## 2

என் கணிப்பு பொய்யாகவில்லை. தமிழ்மணி அ லாட்டரி விற்கும் சிறுவனிடம் வசமாக மாட்டிக் கொள்ள போவதை நினைத்தபோது பரம சந்தோஷமாக இருந்த



ஊருக்கே உடைசல் தரும் மனிதன். இன்று அவனுக்கும் அதிர்ஷ்டம்; அதன் நிமித்தம் பரபரப்புகள், பரவசங்கள்.

"யாரு தமிழுக்கா லாட்டரி உழுந்துருக்கு? நம்ம டாவ் தமிழ்மணிக்கா?"

"பின்ன... நாங்க என்ன அரேபியா பாஷைலயா பேசிக்கிட்டிருக்கோம். அந்தப் பயலுக்குத்தான் லாட்டரி அடிச்சிருக்கு..."

"ஐயோ நல்ல நாள்ளேயே அவன் அளக்கற அளப்ப தாள முடியாதே. இதுல லட்ச ரூவா வேற கிடைச்சா தரைல நடக்க மாட்டானே..."

என் சகாக்கள்தான் ஆளாளுக்கு கமெண்ட் அடித்தார்கள். அப்படியே வழிமேல் விழி வைத்து அவனுக்காக எதிர்பார்க்கவும் செய்தோம்.

நிமிடத்திற்கொருமுறை அந்தப் பொடியன் வேறு வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போனான்.

தமிழ்மணிக்கு சீட்டு விழுந்த விஷயம் பரபரவென்று பஸ் ஸ்டாண்ட முழுக்கப் பரவி விட்டது, அந்தச் சிறுவனுக்கும் மவுசு கூடி விட்டது. இரண்டு கைகளிலும் ஏகத்துக்குச் சீட்டுகளுடன் உற்சாகமாகச் சுற்றி வர ஆரம்பித்தான்.

"பொடியன் உஷார் பார்ட்டின்னு நினைச்சேன். பரவால்ல, லக்கான ஆள்தான். வாடா இங்கன, ஒரு அஞ்சு சீட்டு தாடா..."

"வெண்ண... வெண்ண சோத்துக் கையால தாடா. எனக்கும் லட்ச ரூவா உழுவணும்னு வேண்டிக்கிட்டு தா."

"எலே... அதான் நீ வித்த சீட்டுக்கு ரூவா உழுந்திரிச்கல்ல? இன்னும் என்னாடா கூவிக் கூவி

வித்துகிட்டு? பஸ் ஸ்டாண்டுலையே ஒரு கடைய பிடி ஒக்காந்து விக்கப் பாருடா. அந்த லட்ச ரூ உழுந்தவனோட ஒரு போட்டா படம் எடுத்து மாட் வெச்சுக்க... என்ன?''

''அதாண்ணே அந்தாளைத் தேடறேன். ஆளை காணோம்?''

''வந்தா உட்றாதே. எதாவது பாத்து போட் கொடுக்கச் சொல்லு. உன் முதலாளிக்கும் வகை கமிஷன் இருக்கும். உட்றாதே. என்ன?''

ஆப்பிள் ஆரஞ்சு பேரீச்சை என்று கடை போட்டிருக் சகாக்கள் அந்தப் பொடியனை நன்றாகவே ரேக்கிவி அவன் முகத்தில் மத்தாப்புப் பளபளப்பு. கூடவே அ தமிழ்மணியை இன்னமும் பார்க்க முடியவில்லை என்னும் ஏக்கம்.

எனக்கென்னவோ தமிழ்மணி அன்று இவனிட சொன்னது போல, விழுவதில் பாதியை, அதாவ ஐம்பதாயிரத்தைத் தூக்கி இந்தச் சிறுவனுக்குத் தருவா என்று தோன்றவில்லை.

சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லாதவனி இதை எதிர்பார்ப்பதும் தவறுதான் என்று தோன்றிற ஆனால் என் சகாக்கள் தமிழ் பணம் தராவிட்டா நோண்டி நொங்கு எடுத்து விடுவது என்கிற தீவிரத்தி இருந்தார்கள்.

அவர்களுக்கெல்லாம் இது அல்வா போலக் கிடைத் ருக்கும் சந்தர்ப்பம் அல்லவா?

மொத்தத்தில் தமிழ் அன்று எங்கள் பஸ் புறப்படு வரையில் வரவேயில்லை.



''நீ வேணா பாரு சீனி பய இனி ஆபீஸ் பக்கமே வரமாட்டான். எவண்டா இனியும் மூணு ஷிப்டை பாத்துக்கிட்டு மையையும், ஆயிலையும் அப்பிக்கற துன்னுட்டு நினைச்சிருப்பான்...''

''ஆமாம்ல...?''

கம்பெனியிலேயே சூப்ரவைசரோட மோதல் வரும் போதெல்லாம் லட்ச ரூவாய தரச் சொல்லுங்க; திரும்பிப் பாக்காம போயிடறேன்னு சொல்லிக்கிட்டிருப்பானே. இனி என்னாத்த பண்ணப் போறான்?''

''அவனை மாதிரி ஆளுக்கெல்லாம் லட்ச ரூவாங்கறது ஒரு விசயமா பாண்டி. ரூவாய்க்குப் பத்து வட்டின்னு கந்து வட்டில தான் இறங்குவான்னு நினைக்கறேன்.''

டாவ் தமிழ்மணி என்ன செய்வான் என்று ஆளாளுக்கு கணக்குப் போட்டபடி இருக்க நாங்கள் பயணிக்க வேண்டிய பஸ்ஸும் புறப்பட்டது.

வழக்கம் போல வவ்வால் ஆகி கம்பியைப் பிடித்த படி நிற்கத் தொடங்கினோம். உட்கார இடம் இருந்தது. ஆனாலும் உட்காரக் கூடாது.

''கிட்டவழி டிக்கெட்டெல்லாம் நில்லு, தூர டிக்கெட்டுக்குதான் சீட்டு. பெருங்குடியெல்லாம் ஸ்டாப் கிடையாது. யாரும் ஏறியிருந்தா இறங்கிருங்க. அப்பால் வண்டில ஏறிக்கிட்டு இரைச்சல் பண்ற வேலை வேணாம். ரை... ரை...''

கண்டக்டர் மாறாத அர்ச்சனை மந்திரம் போல தினமும் சொல்வதை அன்றும் சொல்லி வண்டியைக் கிளப்ப, நான் வெளியே பார்க்க ஆரம்பித்தேன்.

படையப்பா ரஜினியை மகாவிஷ்ணு வாக்கி ஓம் வீராய நமஹ, ஓம் முத்தாயை நமஹ, படையப்பனே நமஹ என்று

ஸ்லோகம் சொல்லும் ஒரு போஸ்டர்தான் முதலில் கண்ணில் பட்டது.

பாண்டியர் காலம் தொட்டே கலை வளர்ப்பதில் என் ஊர் நிகரற்றதாயிற்றே? கலைக்காக உடல், பொருள், ஆவியைக் கொடுக்கும் ஜனங்களுக்கு நடுவில் நான் மட்டும் வவ்வாலாகத் தொங்கியபடி வேலைக்குப் போவதும் வருவதும் ஒரு இன்டர்நெட் யுகத்து இளைஞனின் செயலாகவே படவில்லை.

பேசாமல் நானும் லாட்டரி வாங்கியிருக்கலாம். அந்த லட்சம் எனக்கு விழுந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

என்னை நானே தாழ்த்திக் கொண்டு நிற்க, பஸ் நிற்குமிடமெல்லாம் ஆட்கள் ஏறினார்கள். உள் கட்டில் அழுத்தம் ஏற்பட்டு நெறிப்பேற்பட்டது. இதற்கு நடுவில் கண்டக்டரால் மட்டும் எப்படி திருகிக் கொண்டு ஒரு ஸ்க்ரூ டிரைவராகச் செயல்பட முடிகிறதோ என்று எனக்கு ஆச்சரியமேற்பட்டது.

நடுவில் ஒரு ஸ்டாப்பில் ஓடிவந்து தாவி ஏறினான் டாவ் தமிழ்மணி.

பஸ் ஸ்டாண்டில் ஏறினால் அந்தச் சிறுவனை சட..விக்க வேண்டிவருமே என்று ஏறும் இடத்தை இப்படி மாற்றிக் கொண்டு விட்டானா?

“தமிழ்...!”

“ஏய் டாவ்... என்னய்யா லட்ச ரூவாயா? குபேரனையே கணக்குப் பண்ணிட்டியா?”

“என்னா தமிழ் அதிசயமா இருக்கு. பரிசு விழுந்தப் புறமும் வேலைக்குல்லாம் வரே!”



என் சகாக்கள் அவனைப் பார்த்து உதிர்க்கும் கருத்துக்கெல்லாம் ஒரு ஏளனச் சிரிப்பைப் பதிலாக வைக்கிறான் தமிழ்மணி.

“எப்பவும் பழச மறக்கறவன் இல்ல இந்த தமிழ்...” என்று தனக்குத்தானே ஒரு பெரிய தாமரைப் பூவாகப் போட்டுக் கொண்டான்.

எனக்கு சிரிப்பு வந்தது. அவனும் என்னைப் பார்த்து விட்டு முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்தான். அந்தக் கூட்டத்துக்கு நடுவிலும் கைகொடுத்தான்.

“காங்கிராஜுஷன்ஸ்!”

“தேங்க்ஸ் கொமார்... ஏதோ சாமி கருணை...”

“சீட்ட பேங்க்ல சப்மிட் பண்ணிட்டியா?”

“எதுக்கு?”

“எதுக்கா... பணம் வாங்கத்தான்!”

“அது தெரியும்... ஆனா வரி நரி குதிரைன்னு ஏகத்துக்கும் பிடிப்பான். அதனால...”

“அதனால...?”

“நமக்குத் தெரிஞ்ச ஒரு பார்ட்டி இருக்கார். அவர்கிட்ட கொடுத்தா அவர் ஃபுல் கேஷை ஒரே கட்டா கொடுத்துடுவாரு. அவருக்கும் பிளாக்கை ஒயிட்டா மாத்திக்க ஒரு வழி கிடைச்ச மாதிரி. எனக்கும் ஃபுல் அமௌண்ட் கிடைச்ச மாதிரி... எப்படி?”

தமிழ் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். எனக்குச் சற்றே கிர்ர்ரடித்தது.

தேவுடா... உலகத்தில் இப்படி எல்லாம் வழிகளா?

"என்னா கொமார் வாயப் பொளந்துட்டே... நா
சீட்டக் கொடுக்காமலே அந்த பார்ட்டி நான் பல
கேட்டா தருவார் தெரியுமா?"

தெரியாது என்பது போலப் பார்த்தேன்.

"உனக்கும் ஏதாவது ஹெல்ப் வேணும்னா சொல்
செய்றேன்."

ஐயோ... மனத்தில் பதைப்பு பெருக்கெடுத்தாலு
உதட்டில் வேறு மாதிரி காட்ட ஆரம்பித்தேன்.

"ஆமா... என்ன பஸ் ஸ்டாண்டுல ஏறாம வழியி
ஏறியிருக்கே?"

"அது வந்துப்பா... ஒரு வேளையா வில்லாபுர
வந்தேன். அப்படியே வழில ஏறிட்டேன். ஏன், எ
நாயாவது நான் இனி பஸ் ஸ்டாண்டு பக்க
வரமாட்டேன்னாங்களா?"

"இல்ல... இல்ல... சும்மாத்தான் கேட்டேன்."

"அதான பார்த்தேன். நான் என்னமோ அந்த லாட்டரி
பையன பாக்கறதுக்கு பயந்துகிட்டு பஸ் ஸ்டாண்ட் பக்க
வராம இருந்துட்டேன்னும் பேசியிருப்பாங்களே...?"

"இல்லப்பா... நான்தான் கேட்டேன். யாரும் எதுவு
பேசலை."

"பேசட்டுமே... இப்ப யார் அத பெரிசா
எடுத்துக்கப்போறா?"

"சரி... நான் நேர்லையே கேக்கறேன். அந்தப்
பையனுக்கு என்ன பண்ணப் போறே?"

நான் இப்படிக் கேட்ட நொடி தமிழ்மணியின் முகத்தில்
அஷ்டகோணல் உருவகித்தது. மெல்ல என்னை மிக



நெருங்கி, காதோரமாக அவன் சொன்னதில் அது இடம் மாறி என் முகத்திற்குத் தாவியும் விட்டது!

# 3

என் முகம் போன போக்கை என் சகாக்கள் பார்த்து விட்டு அந்தக் கூட்டத்திலும் திருகிக் கொண்டு என்னை சமீபித்தனர்.

"என்னா குமாரு... என்னா சொல்றான் டாவ்? லட்சம் விழுந்த மப்புல எங்களையெல்லாம் பார்க்கக் கூட மாட்டேங்கறான்."

"அப்படியா... இதை தமிழ்கிட்டயே கேட்ற வேண்டியதுதானே?"

"எதுக்கு... இல்ல எதுக்குங்கறேன்? புனுகு பூனை கிட்ட மருந்து கேட்டா மரத்துக்கு மரம் தாவுமாம். இவன் அத விட மோசமல..."

"நீ வேணா பார்... இதான் சாக்குன்னு எழுதிக் கொடுக்கப் போறான். கேட்டா நான் இனிமேட்டு முதலாளி கைகட்டி வேலை பாக்க எனக்கு தலையெழுத்தான்னு கேப்பான்..."

பஸ்சுக்குள் என் சகாக்கள் கணித்தது அகத்தியர் நாடியில் கணித்து ஓலையில் எழுதினது போல நடக்கத் தொடங்கியது. பஸ்ஸை விட்டு இறங்கும்போதே தமிழ் மணியிடம், 'உஸ்ஸ்... ஆ... என்னா ஈனப்பொழப்புடா இது...' என்று சிலாகிப்புகள்.

உள்ளே நுழையும்போதே, நடையிலேயே திருவிளை யாடல் சிவாஜியாட்டம் மகா மிடுக்கு.

கார்டு பஞ்ச் பண்ணாமல் நேரே டிபார்ட்மெண்ட்டு குள்தான் நுழைந்தான்.

"வாய்யா லட்சாதிபதி... கேள்விப்பட்டோம் எல்லாம்" என்று டிபார்ட்மென்ட் ஹெட் கைகுலுக்கக் கை நீட்டினார். ஆனால் பதிலுக்கு தமிழ்மணியின் கை நீளவில்லை. உதட்டில் மட்டும் ஒய்யாரமான சிரிப்பு.

"நீ உழைச்சது போதும். இந்தா பிடின்னு ஆசாமி நீங்கதான் சொல்லலை. ஆனா அந்த குபேரசாமி சொல்லிடிச்சு. எனக்கு இனி மேட்டு இந்த பொழப் வேணாம் சார். குட்பை சொல்லத்தான் வந்துருக்கேன்."

அவன் அப்படிச் சொன்ன மறுநொடி ஒரு வெள்ளை தாளை எடுத்து மேஜை மேல் வைத்தார். அவர்.

"எதுக்கு... எல்லாம் வீட்லையே எழுதி எடுத்துக்கிட் வந்துட்டேன்..." பாக்கெட்டில் இருந்து ராஜினாமா கடித அவர் எதிரில் நான்காய் மடக்கி நீண்டது.

உடனேயே வாங்கி அதில் ஃபார்வேர்ட் என்று எழு கையெழுத்திட்டு தனது அசிஸ்டென்ட்டை அழைத் பர்சனல் டிபார்ட்மென்டில் சேர்க்கச் சொன்னார் அவர்.

காலையில் பேப்பரில் தனது ராசி பலனில் 'ஏழரை ச கழிவிடை' என்று எழுதியிருந்ததையும் நினைத் கொண்டாரோ என்னவோ?

ஃப்ளோருக்குள் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு ஒ நடை நடக்க ஆரம்பித்தான் தமிழ்மணி. நான் பார்த் கொண்டேயிருந்தேன்.

'தமிழ்... சுத்தாதே... உன் ப்ளேசுக்கு போ. அங்க என் பேச்சு? ஒழுங்கா வேலைய பாக்கற வழியப் பாருய்ய என்று கீறல் விழுந்த ரிக்கார்டாட்டம் சதா சர்வகாலமு



முணு முணுக்கும் சூப்பர்வைசர்கள் அவனை நெருங்கி வந்தார்கள்.

"சுத்தாதே... பேசாதே... அங்க நிக்காதே... இங்க உட்காராதே பருப்பெல்லாம் இனி வேகாது சார். நீங்கள்லாம்தான் இனி இங்க கெடந்து சாகணும். எனக்கு அப்படியில்லை. கடவுள் கண்ணைத் திறந்துட்டான்" என்றபடி ஒவ்வொருவராகப் போய்ப்பார்க்க ஆரம்பித்தான்.

"என்ன டாவ் எழுதிக் கொடுத்துட்டியா?"

"பின்ன... இன்னும் கிடந்து சீரழியச் சொல்றியா?"

"லட்சத்தை என்ன பண்ணப் போறே?"

"கோடியாக்குவேன்!"

"பிசினஸா... என்னா பிசினஸ்?"

"கந்து வட்டிதான். வேணுமா, நூத்துக்கு பத்து ரூவாதான் வட்டி."

"ஐயோ... அதெல்லாம் உனக்கு அடங்கி வருமா?"

"வருமாவா... வந்தாகணும். நம்ம மக்கள் யாருக்காவது அவசரம் ஆத்திரம்னா அஞ்சு வட்டிக்குத் தருவேன். சொல்லு. எல்லார்கிட்டேயும் என்ன?"

"சரி டாவ். பார்த்து!"

"பாக்கத்தானே போறே... அடுத்து இந்தக் கம்பெனிக்கு இப்படி பஸ்ஸுல புளிமூட்டையாட்டம் நசுங்கிக்கிட்டு வரமாட்டேன். மாருதிதான்!"

"அது சரி... விடு. ஆமா எழுதிக் கொடுத்துருக்கியே, பிடித்தம் எவ்ளோ தேறும்?"

"என்னா ஒரு எம்பது வரும்னு நினைக்கறேன். அதை அப்படியே ரஜினி படம் எடுக்க பார்ட்னர் ஒருத்தருக்கு ஒதுக்கப்போறேன். வா தம்மடிப்போம்."

"இப்பத்தான் அடிச்சுட்டு வந்தேன். கோழிக்கா[...]
பாத்துக்கிட்டேயிருக்கான். நீ கிளம்பு."

"பாத்தா பாக்கட்டும் நீ வா. எதுனா கேட்டா. கண்[...]
முழியை நோண்டிப் பிடறேன்.

அவர்கள் அப்படியே தொழிற்சாலையின் வ[...]
மண்டமாகக் கருதப்படும் டாய்லெட் அறை நோ[...]
நடந்தனர். வழியில் என்னையும் அழைத்தனர். "கும[...]
வர்றியா?"

நானும் கிளம்பினேன்.

உள்ளே கவளம் கவளமாகப் புகைக் கொட்டாரம்.

ஊதும்போது பூமிப் பந்தையே ஊதிப் பார்ப்பது போ[...]
ஒரு நினைப்பு. உதட்டைக் குவித்து புகை பிரிக்கும் போ[...]
தனக்கு அடிமைப்பட்ட ஒன்றை விடுவித்துப் பார்க்[...]
உணர்ச்சி.

"வா டாவ்... ஃபைனான்ஸ் கம்பெனி நடத்[...]
போறியாமே?" என்று ஒருவன் அதற்குள் கந்து வட்[...]
தொழிலுக்கு ஒரு கிரீடம் சூட்டிக் கேட்டான்.

"அ... ஆமாம்ப்பா! உனக்கு எதுனா தேவைப்பட்[...]
வந்து பாரு..."

"கம்பெனிக்கு என்ன பேர்?"

"குபேரசாமி ஃபைனான்ஸ்னு வைச்சுக்கோயேன்."

"நல்லாருக்கு. நீயும் குபேரனாயி எல்லாரையு[...]
குபேரனாக்கணும். ஆமா தேக்கு பாக்குன்னு எதுன[...]
பிளான் உண்டாம்மா...?"

"எதுக்கு... இல்லை எதுக்குன்னேன். என்னை என்[...]
மெட்ராஸ்காரன்னு நினைச்சியா? நான் மதுரைக்காரன்டா[...]
தேக்கு வைக்கறேன்னு சொல்லி பின்னால சிக்கிக்க[...]



கூடாது. மரம் வைக்கிறேன்னு சொல்லி பின்னால
சிக்கிக்கக்கூடாது. மரம் வெட்டிக்கிட்டிருக்கற காலத்துல
ஒருத்தன் மரம் வைக்கறேன்னு சொல்றான்னா அவன்
எவ்ளோ பெரிய டுபாக்கூர்னு தெரிய வேண்டாம்.

"அதான் கவுத்து மூடிட்டு ஓடிட்டாங்களே... என் ரூட் வேற! பிளாக் தண்டர்மாதிரி எதுனா பண்லாமான்னு பாக்கறேன்."

"அதுக்கு பல கோடி ஆகுமேப்பா."

"என்னா பெரிய கோடி. ஆளுங்கட்சி வட்டச் செயலாளராகி அப்படியே எம்.எல்.ஏ.க்கு ஒரு முட்டு முட்டி சட்டசபைக்கு போய்ட்டா தானா வந்துட்டுப் போகுது கோடிங்க."

-தமிழ்மணி புகையைக் கக்குவது போலவே நகைகளையும் கக்கியவண்ணமிருக்க அந்த பிரதாபத்தில் மற்றவர்களும் கரைந்த வண்ணமிருக்க, ஒருவன் மட்டும் பெரிய புத்திசாலிபோல சற்றுச் சிரித்தான்.

"என்னடா இளிப்பு?"

"இல்ல... எம். எல். ஏ. கோடின்னு நீ பாட்டுக்கு பங்களாவா கட்டிக்கிட்டு போறியா அத நினைச்சேன். என் மாமா முப்பது வருசமா கட்சில இருக்கார். கவுன்சிலரா கூட ஆக முடியலை..."

"அப்படீங்களா... நீ கூடத்தான் பத்து வருஷமா சீட்டு வாங்கறே? உழுந்திச்சா. எனக்கு உழுவலை? அதுக்கெல்லாம் சுழி இருக்கணும்டா. எனக்கு இருக்கு அதான் அடி போடறேன். ஏண்டா சினிமால அஞ்சு நிமிசத்துல ஒரு பாட்டுல ரஜினி கோடீஸ்வரனாகறத ஒத்துப்பீங்க நான் சொல்றத ஒத்துக்க மாட்டீங்களோ?"

"அப்ப ஒரு பிடி பிடிக்கப் போறே... அப்படித் தாலே

"பின்ன... மோதிப் பாத்துர வேண்டியதுதான்."

"எங்களையெல்லாம் மறந்துராதே தமிழு!"

"எப்பவும் பழச மறக்கறவன் இல்ல இந்த தமிழ். நம் யூனிஃபார்ம் டிரஸ்ஸை சர்வர் சுந்தரம் நாகேஷ் மாதி எப்பவும் வைச்சிருப்பேன். தெரிஞ்சுக்குங்க வரட்டா?"

"அப்ப அடுத்து மாருதியிலதான் வருவே."

"பாக்கத்தானே போறே?"

மறுநாள்–

வழக்கம் போல பஸ்ஸுக்கு நின்று கொண்டிருந்த போது அந்த லாட்டரி சிறுவன் வந்து சேர்ந்தான்.

"சார்... தமிழ்மணி சார் வர்லீங்களா?"

"இனிமேட்டு வர மாட்டான் தம்பி பிரைஸ்ல பாதி தருவான்னு நம்பிக்கிட்டிருக்கியா?"

"சேச்சே... அதெல்லாமில்ல சார்" என்று அவன் சாதாரணமாக மறுத்து பதிலளித்த போது எனக்கு ஆச்சர்யமாகத்தானிருந்தது.

"அப்ப எதுக்கு அவனைத் தேடறே?"

"ஒரு போட்டோ படம் எடுத்துக்க சார்... நான் வித்த சீட்டால ஒருத்தர் லட்சாதிபதியாகியிருக்கார். அதைக் காட்டி வித்தா நிறைய சீட்டு விக்கலாம்ல..."

அவனது ஆசை நியாயமாகப் பட்டது. அதே சமயம் எப்படி அந்தப் பாதித் தொகை மேல் துளிக்கூட ஆசையில்லாமல் பேசுகிறான் என்கிற ஆச்சரியம் தாடையைச் சொறிய விட்டது.

"தமிழ் சார் மாதிரி ஒரு நாளைக்கு எவ்வளவோ பேர் வாங்கறாங்க சார். பரிசும் விழுந்திருக்கு ஏதோ ஒரு



வேகத்துல சீட்டு விக்கச்சே பேசற பேச்சு சார் அது. அவ்ளோதான். அது சரி, அவர் ஊடு எங்க இருக்கு தெரியுமா சார்..."

தயக்கத்தோடு அட்ரஸைக் கொடுத்தேன். கொடுக்கும் போது பஸ்ஸில் தமிழ்மணி காதில் சொன்னது எதிரொலித்தது.

"லட்சத்துல பாதிய கொடுக்க நான் என்ன இளிச்ச வாயனா! என்னை வெச்சு அவனுக்குல்ல பேர். போட்டோ பிடிச்சுக்கறேன், வீடியோ எடுக்கறேன்னு எப்படியும் வீட்டுக்கு வந்து நிப்பான். ஒரு போசுக்கு நூறு ரூவான்னா போஸ் தரேன் இல்லாட்டி போயிரும்பேன்! லட்சுமி வர ஆரம்பிச்சுட்டா கொமாரு அவ வர்ற வழியை அடைக்கக் கூடாது. நாலா பக்கமும் வர உடணும். என்ன சொல்றே?"

என்னத்தைச் சொல்வது?

## 4

மூன்று மாதம் ஓடி விட்டது. நாட்களின் எந்திர கதியை நினைத்து எனக்கே பெரிய மலைப்புதான்.

கண்ணாடி முன் நின்று பார்க்கும் போது மீசையில் நரைகள். ஒரு முடிக்கு மறுமுடி என்று யூனிஃபார்மாய் நரை. எனக்குத் தெரியாமல் இரவில் நிகழ்ந்து விட்ட புதிய மாற்றம். என் முடி கூட என் வசத்தில் இல்லை என்று அதன் நிமித்தம் ஒரு கவலை.

கண் பார்வையிலும் கொஞ்சம் சிக்கல்.

வயது நாற்பதில் சாளேஸ்வரம் வருமாமே?

அதன் ஆரம்பங்கள் தெரிந்து மிரட்டுகின்றன.

என்ன வாழ்க்கை இது... புரிபடவோ பிடிபடவோ மறுக்கிறதே?

இன்னும் அரைமணி கூட இல்லை. குளித்து டிபன் என்று ஒன்றைக் கொரித்து விட்டு டூட்டிக்கு கிளம்பியாக வேண்டும். போகவும் பிடிக்கவில்லை-போகாமல் இருக்கவும் பிடிக்கவில்லை.

எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி.யில் செய்த தப்பு.

கட் அடித்து விட்டு காலைக் காட்சிக்குப் போனதன் கோளாறு. எல்லாவற்றிலும் பார்டரில்தான் பாஸ் செய்ய முடிந்தது. சொச்சத்தை சிவாஜியும் எம்ஜியாரும் அன்று பிடுங்கிக் கொண்டார்கள். இன்று அந்த இடத்தில் ரஜினி கமலோ?

அன்று கடிவாளக் குதிரையாக இருந்த என் பல நண்பர்கள் இன்று டாக்டர், எஞ்ஜீனியர்கள்.

அவ்வளவாய் வியர்க்காத உத்யோகஸ்தர்கள்.

இன்கம்டாக்ஸ் அசசிகள்.

நான் ஆகிவிட்டேன் தொழிற்சாலை அகதியாய்...

சில உத்யோகங்கள், இந்த பார்டர் கேஸ்களுக்கு என்றே இருக்கிறதே? ஞானம் இடிக்கிறது. பெற்ற பிள்ளையை யாவது ஒழுங்காகப் படிக்க வைத்து விட வேண்டும். ஹிந்தி வேண்டாம் தமிழ் போதும் என்கிற வட்டார வந்தே மாதரத்துக்கு டாட்டா சொல்லியாக வேண்டும். இரண்டும்தான் வேண்டும்.

"டேய் படிடா... நல்லா படி. டீ.வி. பார்க்காதே"-இந்த கேபிள் டீ.வி. எழவ முதல்ல கட் செய்யணும். அன்று நான் தேடிப் போய் அழித்தேன். இன்று அதுவே வீடு தேடி வந்து



அழிக்கிறது. ரூவாய்க்கு மூன்று பொருள் மாதிரி வேளைக்கு மூன்று சினிமா!

எடிசா... குரங்குகள் கைகளில் பூமாலையைத் தந்து விட்டவனே...

நிதமும் இப்படித்தான் குமுறல். சிந்தனைச் சிதறல். பின்பு உத்யோகப் புறப்பாடு.

நடுநடுவே அலுப்பு சலிப்பு நிமித்தம் வரக் கூடாத நினைப்பெல்லாம் வரும்.

இன்று யூனிஃபார்ம் சகிதம் கிளம்பும் போதும் டீ.வி. யில் ஐம்பது கிராம் தங்கத்தோடு லாட்டரிப் பரிசு பற்றிப் பிரபல நடிகர் ஒருவர் பீற்றினார்.

சட்டென்று பொறிதட்டி மறந்து போன டாவ் தமிழ் மணி ஞாபகத்தில் வந்தான்.

'லட்சத்தை கோடியாக்குவேன்- மாருதி வாங்கி பி.எம். காரை ஓவர்டேக் செய்வேன் எம்.எல்.ஏ. ஆகி கோடீஸ்வரனாவேன் என்று அன்று கண்ட கனவெல்லாம் ஞாபகத்தில் வந்தது.'

நமக்குத்தான் பிழைக்கத் தெரியவில்லையோ?

போய்த் தொலைகிறது என்று ஒரு நூறு ரூபாய்க்கு மாதா மாதம் வாங்குவோமா?

பத்திரிகைக்குப் பத்திரிகைதான் தாயத்து எந்திரம் என்று தந்து நமக்கு உதவி வருகிறார்களே. அதில் ஒரு எந்திரம் நம்மை குபேரனாக்காதா என்ன?

புத்தி லாட்டரி நிமித்தம் எங்கெங்கோ போகிறது.

அது எங்கே போனால் என்ன... இன்றைக்கு வேலைக்குப் போயாக வேண்டும். ஸ்பேனர் செட்டும் மைக்ரோ மீட்டர்களும் காத்திருக்கின்றனவே? ச்சசை...

**வே**லைக்கு நடுவே வசந்த மண்டபம் வரை போ
வரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. போன போது வழக்
போல புகை மூட்டம் நடுவில் தேவசஞ்சாரம். படையப்
விமர்சனம் காதில் விழுந்தது.

"விசைத் தத்துவத்தையே மாத்தறார்டா உங்க ரஜினி
வேலை எடுத்து உட்றாரு. அது ரிவர்ஸ்ல திரும்
நட்டுக்கிட்டு நிக்குது. சூப்பர் பங்காளி..."

"அது சரி போ... வளத்த மரத்தையே புடுங்கிக்கிட்டு
போய் நட்டு உங்க மருதநாயகம் புரட்சி பண்ணலா
நாங்க பண்ணக் கூடாதோ? அடுத்த சிளம்டி எங்காளு
பாத்து பேசு."

"அப்ப நீதான் தலைமைச் செயலாளர்ன்னு சொல்லு."

அரசியல் சினிமா எல்லாவற்றிலும் ஏளனம். அதை
பொழுதுபோக்கு அம்சமாகக் கருதும் மடைமை. அப்படி
தானே அவையும் ஆகிவிட்டன.

சரியான செக்குமாட்டு வாழ்க்கை என்று சலிப்பு மூண்
எழுந்த போது டாவ் தமிழ்மணி பற்றி காதில் விழுந்தது.

"நம்ம டாவ் விஷயம் கேள்விப்பட்டியா?"

"என்னாடா... குபேரசாமி ஃபைனான்ஸ் ஆரம்பிச்சு
டானாக்கும்."

"கிளிச்சான். லாட்டரி பணம், கம்பெனி பண
இரண்டையும் சேத்து ஒரு டுபாக்கூர் பார்ட்டிகிட்ட
வட்டிக்கு ஆசைப்பட்டு கொடுத்துருக்கான். அவன் கடத்த
சரக்கு விக்கறவனாம். இவன் கிட்ட பணத்தை வாங்கிட்டு
போய் சரக்கு வாங்கிக்கிட்டு வந்து இவனையும் கூட்டு
சேர்த்துக்கிட்டு வித்துருக்கான். இதை எவனோ ஒருத்த
போலீஸுக்கு போட்டு விட வகை தொகையில்லாம



கம்பி மாட்டி ஒரு மாசம் சேலம் ஜெயில்ல ஐயா எண்ணியிருக்கார்."

எனக்கு அடுத்த நொடி நெஞ்சையடைத்தது.

"ஏய் நிஜமாவா?"

"உம் போய்ப் பாரு..."

"இப்ப வெளிய வந்துட்டானா?"

"வந்தது மட்டுமா... மானேஜரை ஊட்ல பார்த்து கால்ல விழுந்துருக்கான். திரும்ப வேலைக்கு எடுத்துக்கச் சொல்லி. அவர் ஜெயிலுக்குப் போன கேசுக்கு வேலை தர சட்டத்துல இடமில்லைன்னுட்டார்."

"எதுவுமே எனக்குத் தெரியாதே..."

"அதுக்குத்தான் அப்பப்ப நம்ம வசந்த மண்டபத்துக்கு வரணும்கறது."

"பாவம்டா டாவ்... கோடீஸ்வரன் குபேரன்னு கனா கண்டுட்டு இப்ப பஸ் ஸ்டாண்டை சுத்தறான்."

"எதுக்கு?"

"போய்ப் பாரு தெரியும்."

"இன்னிக்கு காலைல கூட பஸ் ஸ்டாண்டுலதானே பஸ் ஏறினேன்."

"நம்ம ஆபீஸ் டயமான ஒன்பது டு பத்து மணிவரை ஐயா தலைமறைவாயிடுவார். அப்றமாத்தான் ஆஜராவார். ஏன்னா நாமெல்லாம் பாத்து சிரிப்போம் பாரு..."

"சிரிப்போமா...?"

"போய்ப் பாரு தெரியும். ஐயா இப்பவும் குபேரசாமிதான்."

புதிர் போடுகின்றது புகைவிடும் கூட்டம். எனக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் கூடிப் பிரசவித்த குழ அலைகள்!

பஸ் ஸ்டாண்ட்.

பத்து மணி கடந்தவேளையில் உள்ளே நுழைகிறே பரபரப்பான பிழைப்புத் தகிடுதத்தங்கள்.

ரிஸ்ட் வாட்ச் செய்த பாவம் பத்து ரூவாய்க்கு வா ஆளில்லை.

(வாங்கின பத்தாவது நிமிடம் அது சுன்னா டப்பாவாகப் போவது வேறு விஷயம்.)

புதிதாக ஒரு கூட்டம் டிட்டிபேட் கரடியை விர பார்க்கிறது. அசல் கரடியை வைத்து ஒரு பக்கமாக தாயு வியாபாரம் வேறு. போண்டால இருந்து பொண்டா வரை வாங்கலாம் என்று யாரோ சொன்னதெல்லாம் ஓட நான் டாவ் தமிழ்மணியைத் தேடுகிறேன்.

எனக்கு அவன் சூரியனாக இருப்பான் என் எண்ணியிருந்தேன். என்னவானான் என்பது தெரிந்த வேண்டும். ஃபேக்டரியில் நண்பர்கள் பேசிய நிஜம்தானா?

தமிழ்...

தமிழ்மணி...

எங்கய்யா இருக்கே?

தேடித் தவித்த போது காதில் விழுந்தது அவன் குரல்.

"சிக்கிம் ஒரு லட்சம். பூடான் மூணு லட்சம். ஒரிஸ்ஸ நேபாள் பத்து லட்சம் சார். குபேரசாமி சன்னதில வெ பூஜை செஞ்சு எடுத்துக்கிட்டு வந்த சீட்டு சார். பத் சீட்டுக்கு ஒரு பரிசு உத்தரவாதம்!"



-அவன்தான்... அவனேதான்! அடப்பாவி எதால் மூழ்கினாயோ... அதைக் கொண்டே பிழைப்பா...? நான் பார்த்துக் கொண்டேயிருக்கும்போது ஒருவர் அவனை கூடிக்கிறார்.

"சிக்கிமும் பூடானும் இருக்கட்டும். மதுரை எத்தனை லட்சம் அதச் சொல்லப்பா."

"அத நீங்க வாங்க முடியாதுண்ணே. நீங்க ஒரிஸ்ஸா வாங்குங்க. உழுவாட்டி கேளுங்க..."

"என்ன வாங்குன காசைக் கொடுத்துடுவியோ?"

"வாங்கிக்குங்க. இப்ப என்ன ஒரு ரூவாதானே?"

"பரவால்லியே... சரி சரி ஒரு பத்து சீட்ட கொடு."

"அண்ணே உழுந்தா நம்மளை மறந்துடாதீங்க..."

"பாதிய கொடுத்துட்றேன்"-அவன் அப்படிச் சொல்லும் போது அவன் முகம் ஒரு தினுசாக மாறிப் போகிறது. அப்படியே என்னையும் பார்த்து விடுகிறான். நிமிட நேரம்தான் தடுமாற்றம் திகைப்பு எல்லாம் சட்டென்று சுதாரித்து அங்கிருந்து நழுவுகிறான்.

"தமிழ்... தமிழ்மணி... நில்லு."

என் குரலுக்கு அவன் திரும்பத் தயாரில்லை. திரும்பவும் முடியாது.

"என்ன சார் உங்க தோஸ்த்தை கூப்பிடறீங்களோ அவர் இப்ப தமிழ்மணி இல்ல சார். குபேரசாமி!"

-பக்கவாட்டிலிருந்து ஒரு குரல். அந்த லாட்டரி விற்கும் சிறுவன்.

"நீயா..."

"ஆமாம் சார்..."

"என்ன வெறும்கையோட நிக்கறே சீட்டு விக்கலை."

"அவர் பாதி கொடுத்தாரோ கொடுக்கலையோ நான் முழுசாவே கொடுத்துட்டேன். நான் இப்ப ஏஜெண்ட்" அந்தப் பொடியன் கண்ணடித்துச் சிரிக்கிறான்.

எனக்கு நிற்கும் இடம் நரநரக்கிறது.

காலடியில் கஜகர்ண மாற்றங்கள்.

"ஆமாம் உன் பேர் என்ன?"

"ராமச்சந்திரன் சார்... வரேன்."

-போகிறான் அவன் அந்த ராமனைப் போலவே சொல்லில் நின்று விட்டான்.

நான் திரும்புகிறேன்.

வயிறு... பாழாய்ப் போன வயிறு...

ஒரு ஜனத்தை இன்னொரு ஜனம் விழுங்கும் முகாந்தரத்தில் மும்முரமாக இருக்கிறது.

எனக்கு மட்டும் சற்று தெளிவு.

அனைத்துக்கும் நடுவில் தர்மச்சக்கரம் மட்டும் சரியாகவே சுற்றுவதாக!

(முற்றிற்று)